மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.

முன்னிலை :- **திருமதி. C. கலைவாணி, B.A., L.L.B.,**

மாவட்ட உரிமையியல் நீதி பதி .

2021 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 24 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

திருவள்ளுவராண்டு 2052 ஸ்ரீ பிலவ வருடம் ஆவணித்திங்கள் 08 ஆம் நாள்

**இடைநிலை மனு எண். 26/2020 -ல்**

**அசல் வழக்கு எண். 157/2018**

1. ஆர்.கோபிநாத்
2. ஆர். சதீஷ்குமார்

அவர்களது பொது அதிகார முகவர் புஷ்பவள்ளி .... மனுதாரர்கள்/வாதிகள்

**// எதிர்//**

டி.ராஜசேகர் அவரது பொது
அதிகார முகவர் ஜி.துரை. ..எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு 11.08.20121-ம் தேதியன்று என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. R.S. ஜெயசங்கர், திரு. V. K. கோபாலகிருஷ்ணன் ஆகியோர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. S. விஜயன், திரு. K. சிவசுந்தர், திரு. K. கண்ணதாசன் ஆகியோர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலணையிலிருந்து இன்று(24.08.2021) இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவானது, அசல் வழக்கு "ஏ" மற்றும் "பி" ஷெட்யூல் சொத்துக்களை அளவீடு

செய்ய சமூகம் நீதிமன்றத்தில் தொழில் புரியும் வழக்கறிஞர் ஒருவரை நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்து இரு தரப்பு பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் வருவாய் துறை ஆவணங்கள் அடிப்படையிலும், சர்வேயர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் உதவியுடன் அளந்து கண்டறிந்து அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடக்கோரி சிபிசி கட்டளை 26 விதி 9-ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுவின் சுருக்கம் :-

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கின் வாதிகளின் பவர் ஏஜெண்ட் ஆவார். அசல் வழக்கானது வாதிகளின் பொது அதிகார முகவர் என்ற முறையில், வாதிகளுக்காக பிரதிவாதி மீது "ஏ" ஷெட்யூல் சொத்திற்கு , "பி" ஷெட்யூல் சொத்தின் வழியாக செல்கின்ற பாதை குறித்து விளம்புகை மற்றும் செயலுறுத்துக்கட்டளை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு , பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் பொது பாதை குறித்து ஒப்புக்கொள்ளாமலும், "பி" ஷெட்யூல் பாதை குறித்தும் உரிமை குறித்தும், பிரச்சனை இருந்து வருகிறது என எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், அசல் வழக்கில் "ஏ" ஷெட்யூல் சொத்திற்கு "பி" ஷெட்யூல் சொத்தின் வழியாக சென்று வர இயலும் என்பதை சமூகம் நீதிமன்றத்திற்கு தெளிவாக எடுத்துக்காட்டும் வகையில் சமூகம் நீதிமன்றத்தில் தொழில் புரியும் வழக்கறிஞர் ஒருவரை நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்து இருதரப்பு பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் வருவாய் துறை ஆவணங்கள் ஆகியவற்றின் அடிப்படையிலும், சர்வேயர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் உதவியுடன் அளந்து கண்டறிந்து அறிக்கை தாக்கல் செய்ய தகுந்த உத்தரவிடவேண்டியது அவசியமாகவும், நியாயமாகவும் இருப்பதாலும், வாதி மற்றும் பிரதிவாதி தரப்பில் தேவையற்ற வாய்மொழி சாட்சியங்களை தவிர்ப்பதற்கும் வாதிக்கு விசாரணை முடிவை விரைவில் எடுப்பதற்கும் ஏதுவாக அமையும் என்று மனுதாரர் தரப்பில் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்சேபணையின் சுருக்கம்** :-

மனுதாரரரால் தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் உண்மை நிலவரப்படிக்கும் நிலைநிற்கக்கூடியதல்ல. மனுதாரர் தனது தரப்பு கட்சியினை நிரூபணம் செய்வதற்கு உரிய ஆவணங்களை முன்னிலைப்படுத்தாமலும், தகுந்த சாட்சியங்களை பரிசீலணை செய்யாமலும் இருந்து விட்டு தாவா சொத்தினை பார்வையிட ஆணையர் நியமனம் செய்து அதன் மூலம் தனது தரப்பு சாட்சியினை நிரூபிக்க முயற்சி செய்கிறார். மனுதாரர் புதியதாக வழக்கிற்கு தொடர்பற்ற சாட்சியங்களை ஆணையர் மூலம் சேகரித்து அதன் மூலம் வழக்கினை திசை திருப்பும் நோக்கத்திலும், இந்த பிரதிவாதியின் சொத்தினை அபகரிக்கும் நோக்கிலும் இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளதால் இம்மனவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும். மனுதாரருக்கு அசல் வழக்கில் யாதொரு கட்சியும் இல்லை என்ற காரணத்தினால் வழக்கினை இழுத்தடித்து காலதாமதப்படுத்தும் நோக்கில் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார் . எனவே, இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. மனுதாரர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர், அசல் வழக்கில் தாவா "ஏ" ஷெட்யூல் சொத்திற்கு "பி"ஷெட்யூல் சொத்தின் வழியாக செல்கின்ற பாதை குறித்து விளம்புகை மற்றும் செயலுறுத்துக்கட்டளை மற்றும் நிரந்தர உறுத்துகட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எதிர்மனுதாரர்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையில், பொது பாதை குறித்து ஒப்புக்கொள்ளாமலும், “பி" ஷெட்யூல் பாதை குறித்தும் உரிமை குறித்தும் பிரச்சனை இருந்து வருகிறது என தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, “ஏ" ஷெட்யூல் சொத்திற்கு "பி" ஷெட்யூல் சொத்து வழியாகத்தான் சென்று வரமுடியும் என்று நிரூபிப்பதற்கு நீதிமன்ற ஆணையர் ஒருவரை

நியமித்து இரு தரப்பு பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் வருவாய் துறை ஆவணங்கள் ஆகியவற்றின் அடிப்படையிலும் சர்வேயர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் உதவியுடன் அளந்து கண்டறிந்து அறிக்கை தாக்கல் செய்ய தகுந்த உத்தரவிடவேண்டும் என்றும் வாதிட்டார்.

5. எதிர்மனுதாரர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர், மனுதாரர் தனது தரப்பு கட்சியினை நிரூபணம் செய்யாமல் சட்டவிதிகளுக்கு முரணாக ஆணையர் நியமனம் கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும், உரிய ஆவணங்களை முன்னிலைப்படுத்தாமல் தற்போது ஆணையர் நியமனம் கோரி தாக்கல் செய்துள்ளார் என்றும், மேலும், அசல் வழக்கினை இழுத்தடிக்கவேண்டும் வேண்டும் என்ற எண்ணத்தில் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளதால் இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்று வாதிட்டார்.

**6. இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை ஆகும்.**

**பிரச்சினை:-**

1. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட், எதிருரை, வழக்காவணங்கள் ஆகியவை உரிய முறையில் பரிசீலிக்கப்பட்டது.

2. இம்மனுவில் இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியம் ஆவண சாட்சியம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

3. மனு மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலணை செய்கையில், அசல் வழக்கானது மனுதாரர்/வாதியால் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக விளம்புகை மற்றும் செயலுறுத்துக்கட்டளைப் பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு,

எழுவினாக்கள் வனையப்பட்டு விசாரணைக்காகப் போடப்பட்டிருந்தபோது, இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா என்பதை பரிசீலிக்கும்போது, மனுதாரரின் மனு மற்றும் ஆவணங்களிலிருந்து மனுச்சொத்தில் இருதரப்பினர்களுக்கு இடையே பிரச்சினை இருப்பதாக அறிய முடிகிறது. மனுதாரர் தரப்பில் தாவா "ஏ" ஷெட்யூல் சொத்திற்கு தாவா "பி" ஷெட்யூல் சொத்தின் வழியாகத்தான் செல்லமுடியும் என்று தெரிவித்து, நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து இருதரப்பு ஆவணங்கள் மற்றும் வருவாய் துறை ஆவணங்கள் ஆகியவற்றின் அடிப்படையிலும், சர்வேயர் மற்றும் கிராமநிர்வாக அலுவலர் உதவியுடன் கண்டறிந்து அறிக்கை தாக்கல் செய்து நீதிமன்றத்திற்கு விவரிக்க நீதிமன்ற ஆணையர் நியமிக்ககோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால், வழக்கில் உரிய சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை முன்னிலைப்படுத்தாமல், சாட்சியங்கள் சேகரிப்பதற்காக நீதிமன்ற ஆணையர் நியமனம் கோர இயலாது என்ற எதிர்மனுதாரர் தரப்பில் முன் வைக்கப்பட்ட வாதம் குறித்து ஆய்வு செய்கையில், நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு பார்வையிட்டு தாவா "பி" ஷெட்யூல் சொத்தின் பாதை பற்றிய அறிக்கை தாக்கல் செய்வதால், எதிர்மனுதாரருக்கு எந்தவித நேரடியான பாதிப்பும் ஏற்படபோவதில்லை. மேலும், நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு அறிக்கை தாக்கல் செய்யப்பட்டால் வழக்குச் சொத்தில் தாவா "ஏ" ஷெட்யூல் சொத்துக்களுக்கு சென்று வரும் தாவா "பி" ஷெட்யூல் சொத்தின் பொதுபாதை குறித்தும், தாவா "பி" ஷெட்யூல் சொத்தில் வைக்கப்பட்டுள்ள கிரில் கேட்டை குறித்தும், நீதிமன்றத்திற்கு தெளிவாக புலப்படுத்துவதற்கான வாய்ப்பு உள்ளது. இந்த வழக்கில் தரப்பினர்களுக்கிடையே பாதை சம்மந்தமாக பிரச்சனை இருப்பதை கருத்திற்கொண்டும், அசல் வழக்கில் விளம்புகை மற்றும் செயலுறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரியுள்ளதை

கருத்திற்கொண்டும், இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யவதால், தேவையற்ற வாய்மொழி சாட்சியம் தவிரக்கப்படும் என்பதை கருத்திற்கொண்டும், நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்வதற்கு எதிர்மனுதாரர் தரப்பில் கடுமையான ஆட்சேபணை தாக்கல் செய்யாததை கருத்திற்கொண்டும் வழக்கின் தன்மை கருதி மனுதாரர்கள் தாக்கல் செய்த இம்மனுவினை அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**முடிவில்,** இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையராக திரு. P. ராதா அவர்கள் நியமிக்கப்படுகிறார். நீதிமன்ற ஆணையர் ஊதியமாக ரூ. 5,000/- நிர்ணயிக்கப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் இரு தரப்பு வழக்கறிஞர்களுக்கும் முறையாக அறிவிப்பு கொடுத்து, இருதரப்பு பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் வருவாய்துறை ஆவணங்கள் ஆகியவற்றின் அடிப்படையிலும் சர்வேயர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் உதவியுடன் அளவீடு செய்து 2 மாத காலத்திற்குள் அறிக்கை மற்றும் வரைபடத்தினை தாக்கல் செய்யவேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. மனுதாரர் நீதிமன்ற ஆணையருக்குரிய ஊதியம் ரூ. 5,000/-த்தை வரும்13.09.2021 ம் தேதிக்குள் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யவேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. இம்மனுவினை மீண்டும் அழைக்க 14.09.2021

இவ்வுத்தரவு எனனால் சொல்லப்பட்டு சுருக்கெழுத்தரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று (24.08.2021) அவையறியப் பகரப்பட்டது.

S/d. C. Kalaivani.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.

**விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்**

**இருதரப்பிலும் :** இல்லை

S/d. C. Kalaivani.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.